DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

Calender }
Miscellaneous }
Preliminary Register }
Sessions } Case No.SC.171/2019

Deposition of Witness { PW.6
{ Prosecution
{

Name : மாதேஷ்
Father's Name :---
Taluk :---
Calling :---
Religion :---
Age :---

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.11.2024.

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.6 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

1, 12, 13 மற்றும் 22 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் மூலப்பாதையில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். அ.சா.1 முதல் 3 வரையான சாட்சிகளை தெரியும். 1 ம் எதிரியை தெரியும். மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.2 ன் நிலம் என்னுடைய நிலத்தை ஒட்டி உள்ளது. அ.சா.2 ற்கு முருகேசன், சின்னசாமி ஆகியோர் மகன்கள். சடையனுக்கு மொத்தம் 4 ஏக்கர் நிலம் இருந்தது. அதில் 2.25 ஏக்கர் நிலத்தை மூத்த மகன் முருகேசனுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி

வைத்துவிட்டார். மீதமுள்ள நிலம் ஒரு சின்னசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்து அவர் விபத்தில் இறந்துவிட்டார். சின்னசாமியின் மனைவி பெயர் பேபி. அவர்களுக்கு 2 மகள்கள். சின்னசாமி இறந்து சுமார் 20 நாட்கள் கணவர் வீட்டில் பேபி இருந்தார். பின்பு குழந்தைகளை அழைத்து கொண்டு பெற்றோர் ஊரான பூலாம்பட்டிக்கு சென்றுவிட்டார். பின்பு மீதமுள்ள நிலத்தை தனக்கு கொடுத்துவிட வேண்டும் என்று பஞ்சாயத்தார்கள் மூலம் பேபி அ.சா.2-ம் கேட்டார். அதற்கு குழந்தைகள் பெரியவர்கள் ஆகும் வரை நிலத்தை எழுதி கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு சுமார் 10, 15 நாட்கள் கழித்து TVS 50 வாகனத்தில் வந்த 2 பேர் நிலத்தடி நீர் சோதிக்க வேண்டும் என்பதற்காக சடையன் வீடு எங்குள்ளது என்று என்னிடம் கேட்டார்கள். நான் சடையனையும் அவரது வீட்டையும் அவர்களுக்கு அடையாளம் காட்டினேன். பின்பு அவர்கள் சடையனை அழைத்து சென்றுவிட்டார்கள். அழைத்து சென்றவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. சுமார் 8 நாட்கள் சடையன் வீட்டிற்கு வரவில்லை என்பதால் அ.சா.1 ம் அவரது மனைவியும் சடையனை தேடி கொண்டிருந்தார்கள். நான் தான் அவர்களுக்கு நடந்த விவரத்தை சொன்னேன். 8 நாட்கள் கழித்து நான் சடையனை பார்த்த போது ஏன் 8 நாட்களாக ஆளை காணோம் என்று கேட்டதற்கு என்னை நிலத்தடி நீர் சோதிப்பதற்காக அழைத்து செல்லவில்லை அன்று வந்தவர்கள் என்னை கடத்தி சென்று பத்திரம் எழுதி கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்று சொன்னார். இது சம்பந்தமாக முருகேசன் போலீஸ் புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் நில அபகரிப்பு தடுப்பு போலீசார் என்னை அழைத்து சென்று விசாரித்தார்கள். நான் நடந்த விவரங்களை அவரிடம் சொன்னேன். பின்பு சுமார் 10 நாட்கள் கழித்து பேபியின் காட்டை பேபியிடமிருந்து கிரையம் வாங்கியவர்கள் இயந்திரம் மூலம் சமன்படுத்தி கொண்டிருந்தார்கள். அது பற்றி நான் கேட்ட போது பேபியிடம் நிலம் வாங்கியிருப்பதாக சொன்னார்கள். நிலத்தை சமன் செய்தவர்கள் மகுடஞ்சாவடியை சேர்ந்தவர்கள் என கேள்விபட்டேன்.

1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சடையன் எனக்கு உறவினர் இல்லை. சடையனை நிலத்தடி நீர் பார்க்க இருசக்கர வாகனத்தில் வந்து அழைத்து சென்றதாக நான் சொல்லும் சம்பவம் நடந்து சுமார் 3 அல்லது 4

வருடங்கள் இருக்குமா என்றால் 10 வருடங்கள் கூட இருக்கலாம். என் வீட்டில் இருந்து சடையன் வீடு சுமார் 500 அடி தூரத்தில் உள்ளது. நான் சொல்லும் சம்பவம் நடந்த போது சடையன் மாட்டிற்கு தண்ணீர் காட்டி கொண்டிருந்தார். நான் என் நிலத்தில் தட்டு அறுத்து கொண்டிருந்தேன். அப்போது நேரம் காலை சுமார் 10 அல்லது 11 மணியிருக்கும். போலீசார் என்னை விசாரித்த போது சடையனை அழைத்து சென்ற நேரத்தில் நான் சடையனிடம் பேசி கொண்டிருந்ததாக சொன்னேன். சடையனை நிலத்தடி நீர் சோதிப்பதற்காக 2 நபர்கள் அழைத்து சென்றதாக நான் சொல்வதும், பின்னிட்டு சடையன் என்னிடம் அவர்கள் தன்னை கடத்தி சென்று பத்திரத்தில் கையெழுத்து வாங்கி கொண்டதாக சொன்னார் என சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. காவல் நிலையம் அழைத்து சென்று போலீசார் என்னை விசாரித்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. ஒரு முறை தான் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம். நான் பக்கத்து நிலத்துக்காரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

14, 16 மற்றும் 20 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. மற்ற எதிரிகள் தரப்பில் 1 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

Sd/-மாதேஷ்.

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.